THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 7th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

STARRED QUESTIONS.

I.—QUESTIONS AND ANSWERS.

Polytechnics

*82 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of seats in the polytechnics in the State and to open additional polytechnics during 1962–63; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) There is no proposal to increase the number of seats in the existing polytechnics in 1962.63. As regards the starting of new polytechnics, the Government have constituted a Committee to examine this question. The report of the committee is awaited.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: *இந்த ஆண்டிலே இடம் போதாத காரணத்தினால் பல மாணவர்கள் சேர முடியாமல் போய்விட்டது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். அப்படியிருந்தும் புதிய பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?*

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: *இப்பொழுது சர்க்காரில் புதிய கொள்கை வகுத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு மத்திய சர்க்கார் உதவி 50% பணம் கொடுத்தார்கள். இப்பொழுது மூன்றாவது திட்டத்தில் அவர்கள் 40%தான் கொடுக்கப் போகிறார்கள். ராஜ்ய சர்க்கார் இதுவரையில் 25% கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நாம் அதே அளவில்தான் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இனி தனியார் புதிய பாலிடெக்னிக்குகள் வைக்கவேண்டுமென்று சொன்னால், 35 சதவிகிதம் கொடுக்க வேண்டும். 'ரெகரிங் எக்ஸ்பெண்டிசர்' எப்படிப் பிரித்துக் கொள்வது என்பதெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இது 'பினான்ஷியல் ஆஸ்பெக்டைப்' பொறுத்த வரையில்.*

இரண்டாவதாக, எந்த இடங்களில் வைப்பது என்பது பற்றி 'அகில இந்திய டெக்னிகல் எஜுகேஷன் கமிட்டி' அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே நாம் வகுத்த கொள்கை பரவலாக எங்கெல்லாம் தொழில் அதிகமாக இல்லையோ, அந்த இடங்களிலே வைத்துத் தொழில்கள் வளர்வதற்கு ஊக்கம்

[7th July 1962

கொடுக்க வழி செய்யவேண்டுமென்பது 'டெக்னிகல் எஜுகேஷன் கமிட்டி' அபிப்பிராயம் என்னவென்றல், அவர்கள் எங்கெல்லாம் தொழில்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் வைக்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து நல்ல இடங்களாக முடிவு செய்ய வேண்டும். அதனால்தான் காலதாமதம் ஆகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஒரு பாலிடெக்னிக் புதியதாகத் தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு 'எவ்வளவு தொகை 'ரெகரிங் எக்ஸ்பெண்டிசர்' தேவை? 'நான்-ரெகரிங் எக்ஸ்பெண்டிசர்' எவ்வளவு தேவை, நிலம் எவ்வளவு தேவை? கட்டிட வசதி எவ்வளவு தேவை' என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : எல்லாக் கணக்குகளும் சரிவரக் கொடுக்கவேண்டுமென்று சொன்னல், தனிக் கேள்வி போட்டால் கொடுக்கிறேன். ஆனல் 'அப்ரக்ஸிமேட்டாக ஏதோ சராசரி எவ்வளவு செலவாகும் என்று சொல்லவேண்டுமென்றல், ஒரு லட்ச ரூபாய் வருஷத்திற்கு 'ரெகரிங் எக்ஸ்பெண்டிசர்' ஆகும். ஒரு லட்சம் 'ரெகரிங் எக்ஸ்பெண்டிசர்'-க்குப் போதிய மூலதனம் ஒதுக்கி வைத்தால்தான் தனியார் துறையில் பாலிடெக்னிக் ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுக்க முடியும்.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : தொழில் நுட்பப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு நிதி உதவி செய்வதில் ஏற்பட்டிருக்கக்கூடிய கொள்கை மாறுதல் காரணமாக புதிய பள்ளிகள் ஆரம்பிப்பதில் தடங்கல் ஏற்பட்டதா? மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இது நிறைவேறும் என்று அரசாங்கம் நம்புகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : தடங்கல் இருக்காது என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டுக்குள்ளாக இன்னும் அமைக்க வேண்டிய மூன்று பாலிடெக்னிக்களில் ஒன்று பொதுத் துறையில் அமைக்கப்போகிருேம். அது நீலகிரி ஜில்லாவிலே அமைகிறது. பாக்கி இருக்கிற இரண்டையும் எந்த இடங்களில் அமைப்பது என்பதைத் தீர்மானம் செய்யவேண்டும். மூன்ருவது திட்டத்திற்குள் நிச்சயம் இந்த பாலிடெக்னிக்கள் வந்துவிடும்.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : மூன்ருவது திட்ட இறுதிக்குள் எத்தனை இடங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : முப்பது இடங்களில் 'பாலிடெக்னிக்கள்' இருக்கும்.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : 'ஸீட்ஸ்'?

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : அதுபற்றி சரியான புள்ளி விவரம் இப்போது என்னிடம் இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In view of the fact that the northern districts are much neglected in the matter of opening of polytechnics, may I request the Government to consider the

7th July 1962]

question of opening some more polytechnics in the north Arcot and Chingleput districts, especially as our Government are not opposed to the ' North '?

THE HON. SRI R. VENKATARAMAN : I may inform the hon. Member that we are already having two polytechnics in the North Arcot district. The pattern that we have to establish is two polytechnics in each district. According to that pattern, we already have two polytechnics in the North Arcot district.

திரு. ஜே. மாதா கவுடர்: சர்க்கார் துறையிலே நீலகிரி ஜில்லாவில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னீர்கள். அது எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கூடுமானவரையில் அடுத்த வருஷத்தில் ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் முயற்சி செய்யும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சென்னையிலே பெண்களுக்கு என்று ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட இருப்பதுபற்றி பெருமைப்படுகிறோம். அதேபோன்று தென் ஜில்லாக்களிலே இந்த நடப்பு ஆண்டிலே பெண்களுக்கென்று பாலிடெக்னிக் ஆரம்பிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏதாவது யோசனை சொல்லுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: யோசனை 'சொல்லவில்லை', நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: புதிய நிதிக் கொள்கைப்படிகூட பொதுப் பணத்திலிருந்து ஒவ்வொரு பள்ளிகூடத்திற்கும் 65 சதவிகிதம் செலவழிக்கப்படும். ஆரம்பக் கட்டத்தில் தொடர்ந்து செலவழிக்கக்கூடிய செலவிலும் சர்க்காருக்குப் பங்கு உண்டு. அப்படியிருக்கும்பொழுது மாணவர்களை அனுமதிப்பதிலும், தேர்ந்தெடுப்பதிலும் சர்க்காருக்கு என்ன பொறுப்பு உண்டு? அதற்காக ஒரு தனிக் கமிட்டி நியமிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: அதற்காக இப்பொழுது செலக்ஷன் கமிட்டி போட்டிருக்கிறோம்.

திரு. எம். டி. தியாகராஜப் பிள்ளை: ஏற்கனவே அனுமதிக்கப் பட்டிருக்கிற பாலிடெக்னிக்குகளுக்கு மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் கொடுப்பது என்று ஒத்துக்கொண்டிருக்கிற விகிதா சாரப்படி சகாயத் தொகை கொடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர் வெங்கட்ராமன்: பழைய பாலிடெக்னிக்கு களுக்கு எல்லாம் பழைய விதி முறைப்படி நிதி உதவி செய்யப் படும். புதியதாக அமைக்கிற பாலிடெக்னிக்குகளுக்குத்தான் இந்த வழி.